செ.கு.எண் 245 நாள் :- 08.12.11

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 8.12.2011

**6.12.2011** அன்று கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், பெத்தநாயக்கன்குப்பம் கிராமம், வி.எம்.பி நகரைச் சேர்ந்த திரு. அப்துல் ரசாக் என்பவரின் மகன் மாணவர் தாரிக் அஜிஸ் மற்றும் திரு. வேலுசாமி என்பவரின் மகன் மாணவர் வினோத் ஆகியோர் பெத்தநாயக்கன் குப்பம் கிராமத்திலுள்ள ஏரியில் குளிக்கும் போதும், பண்ருட்டி வட்டம், பண்டாரக்கோட்டை மதுரா அம்மா பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனிவேல் என்பவரின் மகன் மாணவர் கிருஷ்ணகுமார், கோட்லாம்பாக்கம் ஏரியில் குளிக்கும் போதும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்த விபத்துகளில் அகால மரணமடைந்த மூன்று மாணவர்களின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த துயரச் சம்பவத்தில் காலமான மாணவர்கள் தாரிக் அஜிஸ், வினோத் மற்றும் கிருஷ்ணகுமார் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்